தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 18.08.2012

கடந்த மாத பதிவுகள்

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN

## புலிகளின் வதை முகாமில் எனது அனுபவங்கள் - தொடர் - 62

மீண்டும் யாழ்.பல்கலைக்கத்துக்குள் பிரவேசித்த காந்தி!




காந்தி எதை மனதில் வைத்துக்கொண்டு என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்கிறான் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. உண்மையைச் சொன்னால் புலிகளுக்குத் தெரிந்துவிட்ட விடயங்களை மட்டுமே நான் புலிகளுக்கு ஒவ்வொன்றாகச் சொல்லி வந்துள்ளேன். எனது வாழ்க்கையில் நடந்து முடிந்துள்ள எல்லா விடயங்களையும் புலிகளுக்குச் சொல்வது சாத்தியமில்லை எனினும், புலிகளுக்கு தேவைப்பட்ட எனக்கு தெரிந்த விடயங்கள் பலவற்றையே நான் இன்னமும் சொல்லி முடிக்கவில்லை.

அதற்கு ஒரு காரணம், எனக்குத் தெரிந்த விடயங்களில் புலிகளுக்கும் தெரிந்த விடயங்கள் என்ன என்ன என்பது எனக்குத் தெரியாமல் இருந்தது. எனவே புலிகளாக ஒரு விடயத்தைக் கேட்கும் போது மட்டுமே அது பற்றிச் சொன்னேன். அதிலும் புலிகள் சந்தேகப்பட முடியாதபடி சில விடயங்களை மறைத்தே கூறினேன். அத்துடன் புலிகள் எதிர்பார்த்த என்.எல்.எப்.ரி இயக்கம் போன்ற விடயங்கள் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. அவ்வளவு தூரம் அந்த இயக்கத்தினர் என்னிடம் தமது இயக்க விவகாரங்களை ஒளித்து வைத்திருந்தனர்.

அதற்கு உதாரணமாக ஒரு வேடிக்கையான சம்பவத்தைக் குறிப்பிடலாம். இப்பொழுது இலண்டனில் வசித்துக்கொண்டு சிறிய பிரமுகராக வலம் வரும் ஒருவர், அப்பொழுது என்.எல்.எப்.ரி இயக்கத்தின் செயற்பாட்டாளராக இருந்தார். அவர் ஒருமுறை ஒரு சிறிய பார்சல் ஒன்றை எனது கடையில் கொண்டுவந்து தந்து, அதை என்ன காரணம் கொண்டும் பிரித்துப் பார்க்க வேண்டாமெனவும், தான் குறிப்பிடும் ஒரு நபரிடம் அதைப் பத்திரமாக ஒப்படைக்கும்படியும் கூறிச்சென்றார்.

அவ்வாறு அவர் குறிப்பிட்ட நபர் வந்தபொழுது, நான் அந்தப் பார்சலை மிகவும் கவனமாகவும், பவ்வியமாகவும் அவரிடம் கொடுத்தேன். அதற்குக் காரணம், அந்தப் பார்சலில் புதியவகை ஆயுதம் ஏதாவது இருக்குமோ என்று நான் கருதியதுதான்! அந்தப் பார்சலை வாங்கிய தோழர் என்மீது பெரிதும் மதிப்பு வைத்திருந்தவர் என்றபடியால், எனக்கு முன்னாலேயே அதைப் பிரித்துப் பார்த்தார். அதற்குள் அந்த இயக்கத்தினர் வெளியிட்டு வந்த இலக்கு என்ற சஞ்சிகையின் இரண்டு பிரதிகள்தான் இருந்தன! அதில் ஒன்றை அவர் எனக்குத் தந்துவிட்டுச் சென்றார்.

இதுதான் அந்த இயக்கத்தினர் என்னிடம் இரகசியங்களை ஒளித்து வைத்த இலட்சணம். ஆனால் நான் புலிகளால் கைதுசெய்யப்பட்ட பின்னர் நடந்த விசாரணைகளின் போது, என்.எல்.எப்.ரி இயக்கம் என் போன்றவர்களிடம் ஒளித்து வைத்த பல விடயங்களை புலிகள் தாராளமாக அறிந்து வைத்திருப்பதைக் கண்டு வியப்புற்றேன். என்போன்ற என்.எல்.எப்.ரி இயக்கத்திடம் நம்பிக்கையற்றிருந்த, பல இயக்கத்தவருடனும் பழகிய, விடயங்களை ஒளிக்கத் தெரியாத ஒருவரிடம், அந்த இயக்கம் தனது இரகசியங்களை மறைத்ததை நான் தவறு என்ற சொல்ல மாட்டேன். ஆனால் அதில் இருந்த சிறுபிள்ளைத்தனமான சிலரின் செயற்பாடுகளைக் குறிப்பிடவே இங்கு அதைக் குறிப்பிட்டேன்.

அந்த இயக்கத்தின் இரகசியம் காப்பதில் இருந்த எதிர்மறையான செயற்பாடு ஒன்றையும் இங்கு நான் சொல்ல விரும்புகிறேன். அந்த இயக்கத்தில் ஆதரவாளராக மட்டும் இருந்துகொண்டு, கலை இலக்கிய சஞ்சிகை ஒன்றையும் சில நண்பர்களுடன் சேர்ந்து நடாத்திய ஒருவர், யாழ்.பல்கலைக்கழகத்தில் படித்துக்கொண்டிருந்தார். எனது நண்பராகவும் இருந்தார். இப்பொழுது அவரும் இலண்டனில் வாழ்ந்துகொண்டு, புலிகளுக்காக இணையத்தளங்களிலும், பத்திரிகைகளிலும் இல்லாத பொல்லாத பொய்களை எல்லாம் எழுதியும் வருகிறார்.

அவர் ஒருமுறை எனது கடைக்கு வந்து, இன்னும் சிறிது நேரத்தில் பல்கலைக்கழக ஊழியர்களின் சம்பளப் பணத்தை சிலர் எடுத்து வரவுள்ளதாகவும், அதைத் தமது என்.எல்.எப்.ரி இயக்கம் கொள்ளையடித்துச்செல்ல காத்துக் கொண்டிருப்பதாகவும் சொல்லிவிட்டு, தானும் அதைப்பார்க்கத்தான் பல்கலைக்கழகத்துக்கு முன்னால் உள்ள எனது கடை வாசலில் காத்துக் கொண்டிருப்பதாகவும் சொன்னார்.

சிறிது நேரத்தில் அவர் குறிப்பிட்டது போலவே சம்பளப்பணம் கொள்ளை போன செய்தி காட்டுத்தீ போல எங்கும் பரவியது. எனக்குச் செய்தி சொன்ன நண்பருக்கு தலைகால் புரியாத சந்தோசம். பறந்தடித்துக்கொண்டு பல்கலைக்கழகத்துக்குள் பாய்ந்து சென்றார். எமது கொள்கைகளின்படி கொள்ளைகளை நான் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், அன்று எல்லா இயக்கங்களும் தமது செலவுகளுக்கு கொள்ளையடிப்பதையே தமது அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாக வரித்துக்கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கையில், உண்மையில் மக்களுக்காக விசுவாசத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் இவர்களும் ஒரு தொகை அரச பணத்தைக் கொள்ளையடித்துத் தமது செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துவதில் தவறில்லை என நானும் எனக்குள் சமாதானம் செய்து கொண்டேன்.

ஆனால் பின்னர்தான் சோகச் செய்தி கிடைத்தது. எனக்குச் செய்தி சொல்லிவிட்டு மகிழ்ச்சியுடன் சென்ற அந்த நண்பர் வாடிய முகத்துடன் திரும்பி வந்து, அந்தப் பணத்தை தமது சாகாக்கள் கொள்ளையிடுவதற்கு முன்னர் வேறு யாரோ அடித்துச் சென்றுவிட்டதாகச் சொன்னார். பின்னர் அவரே சிறிது நேரம் கழித்து திரும்பவும் வந்து, தாம் அதைக் கொள்ளையிடப் போவதாக அறிந்த புலிகள் முந்திக்கொண்டுவிட்டார்கள் என்ற தகவலையும் சொன்னார். இவர் போன்றவர் (என்.எல்.எப்.ரி இயக்கத்தின் நடவடிக்கைகளை முன்னரே அறிபவராக) இருக்கையில், புலிகள் தகவல்களைப் பெற்றுக்கொண்டு முந்திவிடுவதில் என்ன ஆச்சரியம் என எண்ணிக்கொண்டேன்.

இப்படியான ஒரு நிலையில் இருந்துவந்த என்னைப் பார்த்து காந்தி கேட்ட கேள்வி சற்றுத் திகைக்க வைத்தது.

“என்ன விடயத்தை எண்டு குறிப்பிட்டுச் சொன்னால், எனக்குத் தெரிந்ததைச் சொல்லிறன்” என நான் காந்தியிடம் கூறினேன்.

“உனக்குத் தெரியும்தானே என்னென்ன விசயத்தை சொல்லாமல் ஒளிச்சு வைச்சிருக்கிறாய எண்டு;” எனக் காந்தி உறுமிவிட்டு, அந்தக் கொட்டனால் எனது நாரிப்பக்கமாக மீண்டும் ஒரு அடி விட்டான்.

நான் வளைந்து நெளிந்துவிட்டு, என்ன சொல்வது என்று தெரியாமல் யோசித்துக்கொண்டு நின்றேன். அவன்தான் தொடர்ந்தான்.

தேனீ 10 வருடங்கள் 22.02.2002 22.02.2011



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

| |
|---|
| BBC |
| Newsnow |

"கம்பசிலை (பல்கலைக்கழகத்தில்) உனக்கு ஆர்ஆரோடை எல்லாம் தொடர்பு இருந்தது எண்டதை ஒளிக்காமல் முழுக்கச் சொல்லு. தில்லை, செல்வி, மனோகரன், சிவரமணி, டொக்டர் சிறீதரன், ராஜினி திராணகம, டொக்டர் ராஜன் கூல், சித்திரலேகா, ஏ.ஜே.கனகரத்தினா, நு்மான், சிவரஞ்சித், விமலேந்திரன், ஜெயபாலன், சேரன் இப்படிப் பலபேரோடை நீ நெருக்கமான தொடர்பு வைச்சிருந்திருக்கிறாய். இவையெல்லாம் எங்களுக்கு எதிரான ஆட்கள். இவையெல்லாம் உன்னோடை எங்களைப் பற்றி என்ன கதைக்கிறவை எண்டதைச் சொல்லு" என்றுவிட்டு என்னை உறுத்துப் பார்த்தான் காந்தி.

அவன் குறிப்பிட்டவர்களில் சிவரஞ்சித் புலிகளின் மிகத் தீவிர அனுதாபி. அவர் முன்னின்று நடாத்தும் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகம் புலிகளின் ஒரு துணை அமைப்புப் போன்றது. அதைவிட புலிகளுக்குச் சார்பாக பல வெளியீடுகளையும் அவர் வெளியிட்டு வந்துள்ளார். கலாநிதி ஜேம்ஸ் ரி.ரட்ணம் எழுதி அவர்கள் வெளியிட்ட எல்லாளன் சமாதியும் வரலாற்று மோசடியும் என்ற நூலை எமது நோதேர்ண் பிறின்ரேர்ஸ் அச்சகத்தில் நான் அச்சிட்டும் கொடுத்துள்ளேன். தமிழ்த் தேசியத்தை முன்னிறுத்தி, க.சிதம்பரநாதனின் நெறியாள்கையில் யாழ் குடாநாட்டின் மூலைமுடுக்கெல்லாம் மேடையேற்றப்பட்ட மண் சுமந்த மேனியர் நாடகத்திலும் சிவரஞ்சித் முக்கிய பாத்திரத்தில் நடித்துமிருந்தார்.

அப்படியான ஒருவரை புலிகளுக்கு விரோதமானவர்களின் பட்டியலில் காந்தி சேர்த்துக்கொண்டு வினவியதற்குக் காரணம் இருக்க வேண்டும். ஏனெனில் சிவரஞ்சித் புலிகளின் ஒரு விசுவாசியாக இருந்தபோதிலும், புலிகளின் சில நடவடிக்கைகள் சம்பந்தமாக முரண்பாடும் விரக்தியும் அடைந்திருந்தார் என்பதை நான் அறிவேன். பல்கலைக்கழகம் போன்ற புத்திஜீவிகள் நிறைந்த ஒரு இடத்தில் செயல்பட்டுக்கொண்டிருந்த சிவரஞ்சித், அவருடைய நெருங்கிய தோழர் ரவிசேகர் போன்றோருக்கு, புலிகளின் அராஜகச் செயல்களால் இக்கட்டான ஒரு நிலை இருந்து வந்தது. இயல்பாகவே ஓரளவு நேர்மையான தன்மையைக் கொண்டிருந்த சிவரஞ்சித், புலிகளின் இத்தகைய நடவடிக்கைகளை வெறுத்தாலும், தமிழ் தேசியத்தின்பால் அவர் கொண்டிருந்த அவா, அவரைப் புலிகளின் வாலைப் பிடித்தவண்ணம் ஓட வைத்துக்கொண்டிருந்தது.

இருப்பினும் மண் சுமந்த மேனியர் நாடகம் அரங்கேற்றப்பட்ட பின்னர், அந்த நாடகத்தைத் தயாரித்து அளித்த பல்கலைக்கழ கலாச்சாரக்குழுவுக்குள் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டன. இந்தக் குழுவில், அன்றைய காலகட்டத்தில் இயங்கிய எல்லா ஆயுதப்போராட்ட இயக்கங்களையும் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் உறுப்பினர்களாக இருந்தனர்.

முக்கியமாக சிவரஞ்சித், தில்லை, செல்வி, அம்பிகா, மோகன், யோகர், சர்வேந்திரா, அ.ரவி, விந்தன், விஜயரத்தினம் எனப் பலர் அதில் இருந்தனர். அவர்களை வழி நடாத்தியவராகக் கருதப்பட்ட க.சிதம்பரநாதன் பல்கலைக்கழகம் சாராத வெளி ஆளாக இருந்தார். (அப்பொழுது அவர் இப்பொழுது இருப்பதுபோல பல்கலைக்கழக விரிவுரையாளராக இருக்கவில்லை) அவர் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியில் கற்பித்துக் கொண்டிருந்தார். அவர் தவிர அதில் சம்பந்தப்பட்டிருந்த ஒரு வெளி ஆள் நான் மட்டுமே.

மண் சுமந்த மேனியர் கதைக்கான கரு உருவாக்கப்பட்ட சூழ்நிலைமை சுவாரசியமானது. அந்தக் காலகட்டத்தில் க.சிதம்பரநாதன் என்னுடன் மிக நெருக்கமான தொடர்பில் இருந்தார். என்னைச் சந்திக்காத நாட்கள் இல்லையென்றே சொல்லலாம். அவருக்கு புலிகளின் அப்போதைய அரசியல் பொறுப்பாளர் திலீபனுடனும் மிக நெருங்கிய தொடர்பு இருந்தது. அதன்காரணமாக புலிகளின் உள் பிரச்சினைகள் உட்பட புலிகளின் பல விடயங்கள் சிதம்பரநாதன் ஊடாக எனக்கும் கிடைத்து வந்தது. என்னுடன் இருப்பது போலவே சிதம்பரநாதனுக்கு அவருடன் ஒன்றாகக் கற்பித்த எனது நண்பரும் அயலூரவருமான பொன்.சிவராசா மாஸ்டருடனும் நெருங்கிய தொடர்பு இருந்தது. அதேபோல எமது கட்சித் தோழரும் ஆசிரிய சங்கச் செயலாளருமான தோழர் எம்.குமாரசாமி மாஸ்டருடனும் சிதம்பரநாதனுக்குத் தொடர்பு இருந்தது. எமது கட்சித் தோழர்கள் பலருடனும்கூட எம்மூலமாக அறிமுகம் இருந்தது.

இலங்கையில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி விடுமுறை தினமாகையால், ஒவ்வொரு பௌர்ணமி தினத்தன்றும் நான், சிவராசா மாஸ்டர், சிதம்பரநாதன், ஓய்வுபெற்ற தபாலதிபர் தோழர் பதஞ்சலிநாதன் ஆகியோர் குமாரசாமி மாஸ்டர் வீட்டில் அன்றைய இரவு கூடி பல விடயங்களையும் கலந்துரையாடுவதுடன், சிறிது மதுவும் அருந்தி இரவு உணவும் உண்பது ஒரு குறிப்பிட்ட காலம் வரை வழக்கத்தில் இருந்து வந்தது. இரண்டொரு தடவை சிவராசா மாஸ்டரின் சொந்தக் கிராமமான உடுத்துறைக்குச் சென்று இரவு தங்கி, இரவிரவாகக் கடற்கரையில் இருந்து கதைத்துவிட்டும் வந்திருக்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பங்களில் சிவராசா மாஸ்டர் சிதம்பரநாதனைப் பார்த்து, "சிதம்பரநாதன் உம்முடைய நிலைப்பாடு என்ன?" என கேலியாகக் கேட்பதுண்டு. அவர் நகைச்சுவையாகக் கேட்டாலும் அதற்கு ஒரு அர்த்தம் இருந்தது. சிதம்பரநாதன் தான் ஒர் இயக்கத்தையும் சாராத ஒரு நடுநிலை நபர் எனச் சொல்லிக்கொண்டாலும், அவர் புலிகள் மீது அதிகமான விசுவாசம் கொண்டிருந்தார் என்பது சிவராசா மாஸ்டருக்குத் தெரியும். எமக்கும்கூட அது தெரிந்திருந்தது.

சிதம்பரநாதனின் நிலைப்பாடு பற்றிய சிவராசா மாஸ்டரின் கேள்விக்கு, சிதம்பரநாதன் நேரடியாகப் பதில் சொல்லாமல் சிரித்துச் சமாளித்துவிடுவார். ஆனாலும் எமக்குள்ளான உறவு மிகவும் அந்நியோன்யமாகவே இருந்து வந்தது.

சிதம்பரநாதனைப் பொறுத்தவரை, எமக்குத் தென்னிலங்கையில் உள்ள முற்போக்கு சக்திகளுடன் இருந்த தொடர்புகள் பற்றி நிறையத் தெரியும். அவர் என்னிடம் அடிக்கடி கூறும் ஒரு விடயம் உண்டு கடந்தகால தமிழ் தேசியவாதத் தலைமைகள் தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் தொடர்பு கொள்ளாமல் இருந்தது தவறு என்றும், தென்னிலங்கையிலுள்ள ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளையும், தற்போதைய தமிழ் தேசிய விடுதலை சக்திகளையும் (புலிகள்?) ஒரு சமாந்தரமான பாதைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் சொல்வார். அவரது மனைவி பத்மினியும் (புலிகளின் காலத்தில் அவர்களால் தமிழ் தேசியக் கூட்டமைப்புப் பகாராளுமன்ற உறுப்பினராக ஆக்கப்பட்டவர்) தென்னிலங்கையில் இருந்த சில சிங்கள முற்போக்குப் பெண்ணியவாதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததுடன், யாழ்.பல்கலைக்கழகத்திலும் சில முற்போக்கு பெண் விரிவுரையாளர்கள், மாணவிகளுடன் தொடர்பில் இருந்தார்.

1983 ஜீலை 23ம் திகதி இரவு புலிகள் திருநெல்வேலியில் இராணுவ ட்ரக் வண்டி மீது தாக்குதல் நடாத்தி 13 இராணுவ வீரர்களைக் கொன்ற போது, அதற்குப் பதிலடியாக அடுத்தநாள் காலை இராணுவத்தினர் பெருந்தொகையாக அவ்விடத்துக்கு வந்து திருநெல்வேலியிலிருந்து கந்தர்மடம் சந்திவரை பல பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர். அந்த நேரத்தில் இராணுவத்தினரின் கைகளில் அகப்பட்டு உயிர் தப்பியவர்களில் சிதம்பரநாதனும் ஒருவர்!

தொடரும்.......

முன்னைய பதிவுகள்